# ஆண்டறிக்கை - 2017



## தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

## தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

## பேராதனை

# உள்ளடக்கம


| விடய இலக்கம் | பக்க இலக்கம் |
|---|---|
| 1. அறிமுகம் | 01 |
| 2. நிதியத்தின் நோக்கம் மற்றும் நிதி முன்னேற்றம் | 02 |
| 3. விசேடமான செயலாற்றுகைகள் | 03-04 |
| 4. பேராதெனிய அரச தாவரவியல் பூங்கா | 05-08 |
| 5. ஹக்கலதாவரவியல் பூங்கா | 09-11 |
| 6. கம்பஹாதாவரவியல் பூங்கா | 12-13 |
| 7. ஈர வலயதாவரவியல் பூங்கா | 14 |
| 8. பூப் பயிர்ச் செய்கை ஆராய்ச்சிப் பிரிவு | 15-18 |
| 9. கல்விப் பயிற்சி மத்திய நிலையம் | 19 |
| 10. கணேவத்த மூலிகைத் தாவரவியல் பூங்கா | 20 |
| 11. தேசிய தாவரக்கயம் | 21-23 |
| 12. 2017 ஆம் ஆண்டின் அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றிய சுருக்கம் | 24 |

## இலங்கை தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் நலனோம்புகைக்குமான நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

வருடாந்த அறிக்கை– **2017**ம்வருடம்

இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் அப்போதைய விவசாய, காணி மற்றும் வன வள அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 1995 – 12 – 15 ஆம் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தைக் கருத்திற் கொண்டு 1996 – 02 – 07 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்தை ஏற்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவுச் சீட்டு விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 25% இனை வருடாந்தம்,தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்திற்கு வருமானமாகவரவு வைக்கப்படுகின்றது. இதற்காக ஒவ்வொரு வருடத்திலும் திறைசேரியின் அனுமதி அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் 2201 செலவினத் தலைப்பு (மூலதன மாற்றத்தின்) கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. நிதியத்தின் செலவுக்குத் தேவையான நிதி தேவைக்கேற்ப திணைக்களததின் நிதிலிருந்து பெறப்பட்டு வருட இறுதியில் ஈடுசெய்யப்படுகின்றது. இதற்கு மேலாக நிதியத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காக பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிதியமானது நம்பிக்கைப் பொறுப்புச் சபை ஒன்றின் மூலம் நிர்வகிக்கப்படுவதோடு, அந்த பொறுப்பு சபையின் தலைவராக நிரல் அமைச்சின் செயலாளரும் (தற்போதைய வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேசஅபிவிருத்தி அமைச்சு) பொறுப்பு நிதியத்தின் செயலாளராக தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமும் பொறுப்பு நிதியத்தின் அங்கத்துவ உறுப்பினராக பொதுத் திறைசேரியின் வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகமும் கடமையாற்றுகின்றனர்.

**தாவரவியல் பூங்காக்கள் நிதியம்**

| | | |
|---|---|---|
| **1. நிதியத்தின் பெயர்** | : | **இலங்கை தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் நலனோம்புகைக்குமான பொறுப்பு நிதியம்.** |
| **2.தன்மை** | : | **தாவரவியல் பூங்காக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தேவையான சந்தர்ப்பங்களில் மீண்டெழும் செலவு நடவடிக்கைகளுக்கான நிதி உதவியை வழங்குதல்.** |
| **3. தொடர்புடைய சுற்றுநிருபங்கள்** | : | **I நிதியத்தை ஆரம்பித்தல் - 1917 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிதியக் கட்டளைச் சட்டத்திற்கேற்ப**<br><br>**II கணக்கு வைத்தல் மற்றும் கணக்கு அறிக்கையிடல் - திறைசேரி சுற்றுநிருபம் 1977 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய 836 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2006.12.22 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச நிதி சுற்றுநிருபம் PF/423இற்கேற்ப** |

**4. ஆரம்பிக்கப்பட்ட திகதி** :20 ஆம் திகதி டிசம்பர் 1996

**5. அலுவலகம்** : தலைமை அலுவலகம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்,பேராதனை.

**6. வங்கி** : பேராதனை இலங்கை வங்கிக் கணக்கு இலக்கம் : 0007040848

**7. நிதியத்தின் நோக்கங்கள் :**

- ✓ இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தாவரவியல் பூங்காக்கள் பற்றி காணப்படுகின்ற புகழுருவை மென்மேலும் சிறந்ததாக மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.
- ✓ சுற்றாடல் கல்வி மற்றும் இந்நாட்டுக்குரிய தாவரங்களைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பான அர்த்தமுள்ள வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- ✓ தாவரவியல் பூங்காக்களில் பணியிலுள்ள விஞ்ஞானிகளது விஞ்ஞான அறிவு, செயற்பாடுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துதலும் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு தேவையான கருவிகளை கொள்வனவு செய்வதற்குமான நிதி உதவிகளை வழங்குதல்.
- ✓ மூலிகை திரட்டல் சம்மந்தமான வளர்ச்சிப் போக்குடைய வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்துதல்.
- ✓ தாவரவியல் பூங்காக்கள் பயன்பாட்டுக்காக சுற்றாடல் கல்வி,இந்நாட்டுக்குரிய தாவரங்களைப் பேணிப் பாதுகாத்தல் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் தொழில் நுட்ப துறைகளில் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதும் அதற்கு உதவி செய்தலும்.
- ✓ விஞ்ஞானிகளுக்கும் தாவரவியல் பூங்காக்ளுக்கு வருகை தருகின்ற பார்வையாளர்களுக்கும் தேவையான வசதிகளைவழங்குவதற்காக தேவை ஏற்படும் எந்த சந்தர்ப்பங்களிலும் அவசர நிர்மாணப் பணிகளைப் பொறுப்பேற்றல்.
- ✓ தேவையான சந்தர்ப்பங்களில் நடைமுறை நிதி ஒதுக்கீடுகளில் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்.

## 2017 ஆம் ஆண்டின் நிதியத்தின் நிதி முன்னேற்றம்

| | | |
|---|---|---|
| 2017.01.01ஆம் திகதிக்கான வரவு மீதி | = | ரூபா.**153,980,145.33** |
| **கூட்டுக:** | | |
| 2017ஆம் வருடத்திற்கான வருமானம் (வரவு) | = | ரூபா.**172,181,440.00** |
| | | -------------------- |
| மொத்தம் | = | ரூபா. **326,161,585.33** |
| **கழிக்க:** | | |
| **2017** ஆம் வருடத்திற்கான செலவு (பற்று) | = | ரூபா.**149,969,647.38** |
| | | -------------------- |
| 2017.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறான திறைசேரி நிலுவை | = | ரூபா.**176,191,937.97** |

* (இந்த நிலுவை பெயரளவு நிலுவை மாத்திரமே)

**தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் நிறுவப்பட்டதன் பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நம்பிக்கை நிதியத்தின் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி 2017 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.**

வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் மூலம் ''வனதிவிய'' எனும் மாதாந்தப் பத்திரிகை மேலதிக இணைப்பு அச்சிடப்படுகின்றதோடு தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் சார்பாக, அதன் செலவின் ஒரு பகுதியை தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்தின் மூலம் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. இப் பத்திரிகை மூலம் மக்கள் இயற்கையின் அழகினை ரசித்து அதனை நெருங்கி வருவதற்கும், மரம் செடி கொடிகள் பற்றித் தேவையான அறிவு மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் முடியும்.




**வனதிவிய மாதாந்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட இணைப்பிதழ்**

- அலங்காரப் பூப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு மற்றும் பூப் பயிர்ச் செய்கை பற்றிய ஆர்வத்தைக் கொண்டவர்களுக்குத் தேவையான அறிவினைப் பெற்றுக் கொடுப்பதற்காக அலங்காரத் தாவரங்களைப் பயிர் செய்தல் மற்றும் ''ஓக்கிட்'' பயிர்ச் செய்கை தொடர்பான புத்தகங்கள் 2000 அச்சிடப்பட்டுள்ளது. அதன் மூலம் கிடைக்கின்ற வருமானம் தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்தின் மேலதிக வருமானமாகக்கணக்கில் இடப்படும்.

- திணைக்களத்தில் கடமை புரிகின்ற அலுவலர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொள்வதற்காக தேவையான நிதி வசதிகளை ஏற்பாடு செய்வதற்கு தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் நடவடிக்கைகள் எடுத்துள்ளதோடு அதன் மூலம் அவர்களின் அறிவு, திறமைகள் மற்றும் மனப்பாங்குகளை விருத்தி செய்யக் கூடியதாக உள்ளது.

<u>நிதி வசதிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள்</u>

- ✓ வியட்நாமில் நடைபெற்ற தென் கிழக்கு ஆசிய நாடுகளின் தாவரவியல் பூங்காக்கள் பற்றிய கருத்தரங்குச் செயலமர்வு
- ✓ சீனாவில் நடைபெற்ற தாவரவியல் பூங்காக்கள் பற்றிய சர்வதேச கருத்தரங்குச் செயலமர்வு
- ✓ பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களுக்காக மலேசியாவில் நடைபெற்ற முகாமைத்துவம் பற்றிய செயலமர்வு
- ✓ 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டு நாட்களுக்கான வதிவிடச் செயலமர்வு
- ✓ தேசிய தாவரக்கயத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடைமுறைப்படுத்திய "Herbarium Management Techniques" செயலமர்வு




**வருடாந்த இரண்டு நாள் வதிவிடச் செயலமர்வின் ஒரு காட்சி**

## 2017 ஆம் ஆண்டில் நிதியத்தின் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட விசேட அபிவிருத்தி செயற்பாடுகள்

### பேராதெனிய அரச தாவரவியல் பூங்கா


- பழுதடைந்திருந்தபாதையின் ஒரு பகுதி 2016 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செய்யப்பட்டதோடு, மேலும் ஒரு பகுதி 2017 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செய்யப்பட்டது. அதற்காக தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்தின் மூலம் ரூ. 3.4 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

  பாதை அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்னர் இலகுவாகவும், பாதுகாப்பாகவும் பூங்காவினுள் பயணஞ் செய்வதற்கும் பூங்காவினைக் கண்டு களிப்பதற்கும் முடியுமாக உள்ளது.



புனரமைப்புச் செய்யப்பட்ட பாதையின் ஒரு பகுதி

- பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், பூங்காவினுள் பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்ற உக்காத பொருட்கள் சேருகின்ற அளவும் விரைவாக அதிகரித்துக் காணப்படடது. அதற்கேற்ப குப்பை கூழங்களை அகற்றுவதனை ஒழுங்காக மேற்கொள்வதற்காக கழிவு முகாமைத்துவ முறைமை ஒன்றை நிறுவுவதற்கு 2017 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக 1.6 மில்லியன்ரூபாவை ஒதுக்குவதற்குநம்பிக்கை நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.



புதிய கழிவு முகாமைக்கான குப்பைத் தொட்டிகள

- பூங்காவிற்கு வரும் பார்வையாளர்களுககுத் தேவையான தகவல் தொலைத் தொடர்பிற்காக பெயர்ப் பலகைகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக ரூ. 0.5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.




புதிதாக நிறுவப்பட்டுள்ள பெயர்ப் பலகை

- 2016 ஆம் ஆண்டில் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்ட நிறைவேற்றுத் தர உத்தியோகபூர்வ விடுதி, இவ் வருடத்தில் பூரணப்படுத்தக்கூடியதாக இருந்ததோடு அதற்காக நிதி ஒதுக்கீடாக ரூ. 5.4 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அத்தோடு ரூ. 4.7 மில்லியன் செலவிடப்பட்டு அரச தாவரவியல் பூங்காவினுள் உள்ள, வரலாற்றுப் பெறுமதி மிக்க, இத்தாவரவியல் பூங்கா ஆரம்பிக்கப்பட்ட கால கட்டத்தில் (1900 ஆம் ஆண்டளவில்) கட்டி எழுப்பப்பட்ட கட்டடமொன்று பாதுகாக்கப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.



**அரச தாவரவியல் பூங்காவின் ஆரம்பத்தில் கட்டப்பட்ட கட்டடம் புனர் நிர்மாணம் செய்யப்படும் விதம்**

- பேராதனைஅரச தாவரவியல் பூங்காவினுள் தாவரப் பாதுகாப்புக் கூடமொன்றினை நிர்மாணிக்க ஆரம்பிக்கப்பட்டமை இவ் வருடத்தில் நடைமுறைப்படத்தப்பட்டமுக்கியநடவடிக்கையாகும். இதுவரையிலும் அதற்காக ரூ. 3 மில்லியன் நிதி ஒதுக்கீடு தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ளது.



**தாவரப் பாதுகாப்பு இல்லத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றுள்ளமை.**

- மேலும் பூங்காவினை அழகாக வைத்திருப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டினை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.






**அழகாக பராமரிக்கப்பட்டு வருகின்ற பேராதனை தாவரவியல் பூங்கா**

- பூங்காவின் பராமரிப்பு நடவடிக்கைக்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் பூங்கா நம்பிக்கை நிதியம் பங்களிப்புச் செய்வதோடு, அதற்காக 2017 ஆம் ஆண்டில் 3.1 மில்லியன் செலவிடப்பட்டது.

## ஹக்கல தாவரவியல் பூங்கா

- ஹக்கல பூங்காவிற்கு வருகை தருகின்ற பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதன் காரணமாக நுழைவாயில் வழியான பாதை மிகவும் நெரிசலடைகின்றது. இதனைத் தீர்க்கும் முகமாக புதிய நுழைவாயில் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காகவும் தாவரவியல் பூங்கா நம்பிக்கை நிதியத்திலிருந்து நிதி ஒதுக்கப்பட்டு ரூ. 8.4 மில்லியன் செலவாகியுள்ளது.



ஹக்கல பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய நுழைவாயில்

- 0.2 மில்லியன் செலவிடப்பட்டு "நொக்ஸ்"வசந்த இல்லத்தினை அபிவிருத்தி செய்வதற்கு இவ் வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



**புனர் நிர்மாணம் செய்யப்பட்டதன் பின்னரான "நொக்ஸ்"வசந்த இல்லம்**

- பூங்காவின் உள்ளே சேருகின்ற குப்பைகளை ஒழுங்கு முறைப்படி அகற்றுவதற்குத்தேவையான கழிவு முகாமைத்துவக் கட்டிடமொன்று பூங்காவில் நிறுவப்பட்டுள்ளது. அதற்காக 4.2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதோடு அதன் மூலம் பூங்காவினை சுத்தமாக வைப்பதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.




**புதிய கழிவு முகாமைத்துவக் கட்டடத்தின் ஒரு தோற்றம்**

- பூங்காவின் சேவைக்காக, தூரப் பிரதேசங்களிலிருந்து வருகை தரும் அலுவலர்கள் போக்குவரத்து வசதிகள் குறைவாக இருப்பதன் காரணத்தினால் பல கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. அதற்குத் தீர்வாக உத்தியோகபூர்வ விடுதிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, அதற்காக 7.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற, 4 வாசஸ்தலங்கள் அடங்கிய உத்தியோபூர்வ விடுதி

- பூங்காவினைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வேலி விஸ்தரிக்கப்பட்டு ஒழுங்கு முறையாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக 3.2 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதோடு இதன் காரணமாக பூங்கா மேலும் பாதுகாக்கப்பட்டுள்ளது.



ஒழுங்கு முறையாக அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலி

## கம்பஹா தாவரவியல் பூங்கா

- அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் முன்னெடுக்கப்படும் கம்பஹா தாவரவியல் பூங்காவின் "ஓக்கிட்" இல்லத்தின் நிர்மாண நடவடிக்கைகள் இந்த வருடத்தில் துரிதப்படுத்தப்பட்டன. இதனை நிர்மாணிப்பதற்காக ரூபா 4.8 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு, இதுவரை 95%மான பணிகள் நிறைவு பெற்றுள்ளன.



நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்று வருகின்ற ஓக்கிட் இல்லம்

- பார்வையாளர்களது ஆர்வத்தைக் கவரும் நோக்காகபூங்காவினுள் புதிய பூ மாதிரிக் கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்காக தாவரவயில் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு அதற்காக 2.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.



பூங்காவிற்குள் புதிதாக அமைக்கப்பட்ட பூ மாதிரிக் கட்டமைப்பு

- கம்பஹா பூங்கா அமைந்துள்ள காணியை அண்மித்துப் பாய்கின்ற அத்தனகலு ஓயா காரணமாக சில பிரதேசங்களில், வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் கரை அரிப்புக்குள்ளாவது அதிகரித்துள்ளது. அதனைத் தடுக்கும் முகமாக அணைக்கட்டினை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக 5.2 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.



**அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் தாவரவியல் பூங்காவின் எல்லையிலுள்ள அத்தனகலு ஓயாக் கரையின் தோற்றம் (1 ஆம் கட்டப் பணிகள் நிறைவு பெற்றதன் பின்னர்)**

- பூங்காவினுள் காணப்படும் செடி விற்பனைக் கூடம் மற்றும் நிழற் கூடம் ஆகியவற்றினை புனர் நிர்மாணம் செய்வதற்காகவும் இவ் வருடம் 0.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டினைச் செய்வதற்கு தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

- 2.2 மில்லியன் ரூபா செலவு செய்து பூங்காவினைச் சுற்றியுள்ள மதிலைப் புனர் நிர்மாணம் செய்வதற்காகவும் இவ் வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு அதற்காக தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்திலிருந்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## அவிசாவலைசர வலயத் தாவரவியல் பூங்கா

- அவிசாவலைப் பூங்கா படிப் படியாக மக்களிடத்தில் பிரபல்யமடைந்து வருவதோடு வருகை தரும் பார்வையாளர்களுக்கு புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் படகுத் துறையொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக ரூ. 2.4 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.





அவிசாவலைப் பூங்காவில் நிர்மாணக்கப்பட்டுள்ள படகுத் தரிப்பிடம்

## பூச் செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

- சுய தொழில் செய்பவர்களை முன்னேற்றும் அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம் நாடு முழுவதிலும் பரந்துள்ள சிறிய மற்றும் நடுத்தர பூப் பயிர்ச் செய்கையாளர்களை முன்னேற்றுவதற்காக முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு பூப் பயிர்ச் செய்கைப் பிரிவு இவ் வருடத்தில் நடவடிக்கை எடுத்துள்ளது.

  **i.** பூப் பயிர்ச் செய்கை சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு பல்வேறு பிரதேசங்களில் பூச் செய்கை மற்றும் விற்பனைக் கண்காட்சிகளை நடாத்துவதற்கு மற்றும் அதற்காக வசதிகளை செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் அவர்களின் வருமானம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துக் காணப்பட்டுள்ளது. இதற்காக 1.8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.





**பூச் செய்கைப் பிரிவின் அனுசரனையில் இடம்பெற்ற மலர்க் கண்காட்சி ஒன்று**

**ii.** பூச் செய்கையாளர்களுக்கான ஆலோசனை சேவைகளை வழங்குவது மட்டுமன்றி அவர்களுக்குத் தேவையான நிழல் வலைகள், பூச் சாடிகள் போன்றவற்றை வழங்குவதற்கும் இவ்வருடத்தில்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அதிகமானோர் பூச் செய்கை நடவடிக்கைளில் ஈடுபட்டுள்ளதனையும் காணக் கூடியதாகவுள்ளது. இதற்காக 10.7 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது






**பூ வளர்ப்போருக்காக தேவையான பொருட்களைப் பகிர்ந்தளிக்கும் சந்தர்ப்பம் ஒன்று**

**2017 ஆம் ஆண்டில் சுவஹஸ் மலர்ச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள்**

| தொடர் இலக்கம் | பிரதேசம் | சாடிகள் (20cmx25cmx14.5cm) | UV treated பொலித்தீன் சுருள் | நிழல் வலை சுருள்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (3mx100m)50% | (3mx100m)60% | (3mx100m)70% | (3mx100m)70% | (3mx100m)80% |
| 1 | குருணாகல் | 3500 | 4 | 5,17m | 5 | 10 | 2,40m | 4 |
| 2 | அம்பாறை | 500 | 2 | - | 1 | 1 | - | 1 |
| 3 | மொனராகலை | 1000 | - | - | - | - | - | - |
| 4 | கேகாலை | 3000 | 2 | - | 3 | 6 | - | 16 |
| 5 | கண்டி | 3000 | 1 | 5 | 5 | 4 | 2 | 4 |
| 6 | இரத்தினபுரி | 300 | - | - | - | - | - | 1 |
| 7 | மாத்தளை | 3000 | 1 | 4 | - | - | 1 | 5 |
| 8 | அம்பாந்தோட்டை | 7000 | 2 | 4 | - | 8 | - | - |
| 9 | கம்பஹா | 8000 | 4 | 5 | 13 | 52 | - | - |
| 10 | நாரஹேன்பிட்ட | 2500 | 2 | 4 | 7 | 4 | - | 9 |
| 11 | ஹக்கல | - | 10 | - | - | - | - | - |
| 12 | மீகல்லாவ | - | - | - | - | - | - | 2 |
| 13 | புத்தளம் | - | - | - | - | - | - | 7 |
| மொத்தம் | | 31800 | 28 | 27.17 m | 34 | 85 | 5.40 m | 49 |

- பூச் செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் நிர்மாணங்கள் மற்றும் நவீனமயப்படுத்தலுக்காக ரூ.4.7 மில்லியன் நிதியினை ஒதுக்குவதற்கு இவ்வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- அத்துடன் ஆய்வு கூடத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காகவும் மற்றும் இரசாயன ஆய்வு கூட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவும் இவ் வருடத்தில் 1.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டினை வழங்குவதற்கு நம்பிக்கை நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

**பூப் பயிர்ச் செய்கைப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகள்**

- ✓ 4 – 8 மாதங்கள் வயதுடைய மத்திம அளவிலான டென்ட்ரோபியம் ஓக்கிட்டின் வளர்ச்சிக்காக உரக் கலவையின் விகிதம் மற்றும் ஓமோன்களின் செல்வாக்கு பற்றிய ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- ✓ ஒன்சீடியம் ஓக்கிட் பூ மஞ்சரியிலிருந்து (பூந்துணர்) இழையப் பகுப்பு முறைமூலம் தாவர இனப்பெருக்கம் பற்றி பரிசோதித்தல்.
- ✓ மல்லிகை மற்றும் அலரிப் பூக்களை நீண்ட தூரத்துக்கு போக்குவரத்துசெய்வதற்கான முறையொன்றினைக் கண்டறிதல்.
- ✓ **"Potpuree"**க்காக வாசனையுள்ள பூக்களை உலர்த்துவதற்கான செயன்முறையொன்றை மேம்படுத்தல்.
- ✓ ***A.adreanum*** தாவரங்களில் பற்றீரியா தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக தாரவர எண்ணெய்களும் மற்றும் அத்தியாவசிய எண்ணெய் வகைகளிலுள்ள பற்றீரியாவினை அழிக்கக் கூடிய தன்மையினை ஆய்வு செய்தல்.
- ✓ டென்ட்ரோபியம் இழைய பகுப்பு வளர்ப்பிற்காக பகுதியளவிலானசேர்மானம்**MS** ஊடகம் மற்றும் பல்வேறு ஹோமோன்சேர்மானங்களைப் பயன்படுத்தும் முறையைக் கண்டறிதல்.
- ✓ **"Avo Red"** அந்தூரியம் வகை பூப்பதனை மேம்படுத்துவதற்கான உரக்கலவை மற்றும் பாவனை முறைபற்றிய ஆய்வு.
- ✓ அந்தூரியம் மற்றும் அக்லோனிமா தாவரங்களில் புதிதாக வளரும் கிளைகளின் எண்ணிக்கை மற்றும் நீளத்தில் ஓமோன்களின் செல்வாக்கு குறித்த ஆய்வு.
- ✓ நுனி அகற்றப்பட்ட ***Dracaena reflexa*** தாவரங்களில் புதிதாக வளரும் கிளைகளின் எண்ணிக்கை மற்றும் நீளத்தில் ஓமோன்களின் செல்வாக்கினைக் கண்டறிதல்.
- ✓ இரு வகையான ஜெர்பரா தாவரங்களுக்கு இழையப் பகுப்பு செய்யும் போது பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தவதால் ஏற்படும் தாக்கம் பற்றிய ஆய்வு.
- ✓ அலங்காரத் தாவரமாக பெறுமதியுடைய மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய இந்நாட்டுத் தாவரங்களை இழைய வளர்ப்புச் செய்தற்காக புதிய செயன்முறையினை நடைமுறைப்படத்துதல். உதாரணம்:- கிரீடா, தெபுவியா, அலங்கார இலைகளையுடைய அந்தூரியம் வகைகள்.
- ✓ இழை வளர்ப்புச் செய்வதற்காக அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பத்தினை மேம்படுத்தல்.
- ✓ உயிரியல் படலங்கள் - உயிரியல் பசளை (**Bio fim - bio fertilizer)**யினை பயன்படுத்துவதன் மூலம், கிருமிகளினால் தாக்கப்பட்ட,இழைய வளர்ப்புச் செய்யப்பட்ட ஓக்கிட் மற்றும் அந்தூரியம் செடிகளின் வளர்ச்சியை துரிதப்படுத்தி செழிக்கப்பண்ணும் சாத்தியத்தைக்கண்டறிதல்.
- ✓ ***Zamioculcas Zamifolia*** தாவரங்கள் பதார்த்த ஊடகத்தில் பயிர் செய்வதன் மூலம் பெறுமதி சேர் உற்பத்தியொன்றாக உள்ளக அழகு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தக் கூடிய சாத்தியத்தைக் கண்டறிதல்.

## கல்விப் பயிற்சி மத்திய நிலையம்

- பூச் செய்கை, வீட்டுத் தோட்டத்தினை அழகுபடுத்தல் போன்ற பிரிவுகளுக்கு எதிராக ஆர்வத்தைக் காட்டுகின்ற தரப்பினர்களுக்காக பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள், நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன கல்விப் பயிற்சி நிலையத்தின் ஆதரவுடன் நடாத்தப்படுகின்றன.

  அதற்காக தேவைப்படுகின்ற நிதித் தேவைகளுக்காக நிதி ஒதுக்கீடுகளை பெற்றுக் கொள்வதற்கு நம்பிக்கை நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளதோடு, அதற்காக 0.7 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.





நடாத்தப்பட்ட பயிற்சி வகுப்பின் ஒரு தோற்றம்

- கல்விப் பயிற்சி நிலையத்தின் புனர்நிர்மாண நடவடிக்கைக்காகவும் இந்த ஆண்டிலேரூபா 1.2 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## கணேவத்த மூலிகைப் பூங்கா

- மூலிகைத் தாவரங்களை இனங் காணல், பாதுகாத்தல்,விஸ்தரித்தல், மக்களுக்கு தெளிவுபடுத்தல் போன்ற மிக முக்கியமான சேவைகள் பல கணேவத்த மூலிகைப் பூங்காவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

- அந்த நடவடிக்கைகளை வெற்றி கொள்வதற்காக இவ் வருடத்தில் ரூபா 0.7 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்வதற்காக தாவரவியல் பூங்கா நம்பிக்கை நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.





மூலிகைகள் பற்றி அறிவூட்டும் விரிவுரை ஒன்று

## தேசிய தாவரக்கயம்

தேசிய தாவரக்கயம் மூலம் தாவரப் பாதுகாப்பு,அதனை நடாத்திச் செல்லல் மற்றும் தாவரங்களை இனங்காணல் பற்றிய மிக முக்கியமான பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. இதன் நடவடிக்கைகளை கொண்டு செல்வதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 4.8 மில்லியன் நிதி ஒதுக்கீட்டினை வழங்குவதற்கு நம்பிக்கை நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

2017 ஆம் ஆண்டில் தேசிய தாவரக்கயம் மூலம் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கியமான செயற்பாடுகள்

- தாவர ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 23 கள ஆய்வுகள் (ஒரு நாள் - 14, இரண்டு நாட்கள் - 06, மூன்று நாட்கள் - 03) நடாத்தப்பட்டன. அங்கே பூக்கும் தாவர மாதிரிகள் 1185 உம், பன்னத் தாவர மாதிரிகள் 113 உம், பாசித் தாவர மாதிரிகள் 47 உம் சேகரிக்கப்பட்டன.
- இம் மாதிரிகளுள் அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்களை அடையாளம் காணும் பணி முன்னெடுக்கப்பட்டதோடு, அழிவுற்ற தாவர வகையைச் சார்ந்த 01 தாவர இனமும்,அழிவுற்றதென்று கருதக் கூடிய தாவர வகையைச் சேர்ந்த ஒரு தாவர இனமும், மிகவும் அழிவுறும் ஆபத்துக்கு அதிகம் உட்பட்டுள்ள தாவரங்கள் 07 உம், அழிவுறும் ஆபத்துக்கு அதிகம் உட்பட்டுள்ள தாவரங்கள் 60 உம், எதிர்காலத்தில் அழிவுறும் ஆபத்துக்கு உட்பட முடியுமான தாவரங்கள் 85 உம், அழிவுறும் ஆபத்துக்கு உட்படும் நிலையை அண்மித்துள்ள தாவரங்கள் 59 உம் அடையாளம் காணப்பட்டன.



**ரூமஸ்ஸல பிரதேசக் கள ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டின் சிவப்புத் தரவுப் பட்டியலில் அழிந்து விட்ட தாவரம் எனக் குறிப்பிடப்பட்ட *Rinorea bengalensis* தாவரம**

- பூக்கும் தாவரங்கள் 2254 உம், பன்னத் தாவரங்கள் 91 உம் மற்றும் பாசித் தாவரங்கள் 225 உம் மாதிரிகள் இனங் காணப்பட்டு உரிய சரியான தாவரவியல் பெயர்பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- இதற்கு மேலதிகமாக 21 சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக பலகை மாதிரிகள் 102 இனை பரிசோதனை செய்து உரிய சரியாக இனங்கண்டு கொள்ளும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.
- உயிரினப் பல்வகைமை,பாதுகாப்பு,தாவரக்கய தொழில் நுட்ப முறைகள் மற்றும் முகாமை ஆகிய தலைப்புக்களின் கீழ் 25 விளக்கமளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்காக பாடசாலை மாணவர்கள், அரசாங்க மற்றும் தனியார் பிரிவு உத்தியோகத்தர்கள் 1174 பேர் கலந்து கொண்டனர்.

- தேசிய தாவரக்கயத்தினால் ''தேசிய சிவப்புத் தரவுப் பட்டியல்'' என்ற புத்தகத்தைத் தயாரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்குபாரிய பங்களிப்புச் செய்யப்பட்டது. அதன் போது தாவர மாதிரிகளை மதிப்பீடு செய்தல், தகவல் சேகரித்தல் மற்றும் தாவரங்களின் பெயர்களை உறுதிப்படுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- பாசித் தாவரப் பேணுகை நிகழ்ச்சித் திட்டமொன்றும் தாவரக்கயத்தினால் முன்னெடுக்கப்பட்டு கள ஆய்வுகளின் போது சேகரிக்கப்பட்ட பாசித் தாவர மாதிரிகளின் சேகரிப்பொன்று பேராதெனிய அரச தாவரவியல் பூங்காவில் ஸ்தாபிக்கப்பட்டு உல்லாசப் பயணிகள் கண்டு களிப்பதற்காக நடாத்திக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- உயிரினப் பூகோள விஞ்ஞானம் பற்றிய ஒரு நாள் செயலமர்வு ஒன்று உயிரின விஞ்ஞான நிறுவனத்துடன் இணைந்து அரச தாவரவியல் பூங்காவின் கல்வி நிலையத்தில் தேசிய தாவரக்கயத்தினால் ஏற்படு செய்து நடாத்தப்பட்டது. இங்கு உயிரினப் பூகோள விஞ்ஞானம் பற்றிய விரிவுரைகள் நடாத்தப்பட்டதோடு பிரயோக விளக்கங்களும் வழங்கப்பட்டன. பிரதானமாக பல்கலைக்கழக சமூகமும் ஏனைய சம்பந்தப்பட்ட துறையினரும் இதன் மூலம் அறிவூட்டப்பட்டனர். இதற்காக புளோரிடா பல்கலைக் கழக உயிரின விஞ்ஞான பீடத்தின் உயிரியல் விஞ்ஞான நூதனசாலையைச் சேர்ந்த கலாநிதி நிக்கோ செலினஸ் (Dr. Nico Cellines)தென்னாபிரிக்க க்வாஸுலு – நடால் பல்கலைக் கழக (Quasulu –Natal university) சிரேஷ்ட ஆய்வாளர் கலாநிதி ரொபர்ட் டக்ளஸ் ஸ்டோன் ((Dr.) Robert Douglas Stone) மற்றும் புளோரிடா பல்கலைக் கழக உயிரின விஞ்ஞான பீடத்தின் உயிரியல் விஞ்ஞான நூதனசாலையைச் சேர்ந்த திருமதி பிரபா அமரசிங்ஹ ஆகியோர் கலந்துகொண்டனர்.





**உயிரியல் பூகோள விஞ்ஞானம் பற்றிய ஒரு நாள் செயலமர்வு**

- தாவரக்கயம் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் பற்றிய தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக, சர்வதேச வளவாளர்களின் பங்களிப்புடன் ஒரு நாள் கருத்தரங்கொன்று நடாத்தப்பட்டது. இதற்காகவும் புளோரிடா பல்கலைக் கழகத்தின் கலாநிதி நிக்கோ செலினஸ் (Dr. Nico Cellines) மற்றும் தென்னாபிரிக்க க்வாஸுலு – நடால் பல்கலைக் கழக கலாநிதி ரொபர்ட் டக்ளஸ் ஸ்டோன் (Dr. Robert Douglas Stone) ஆகியோர் கலந்துகொண்டனர்.

- Ebonaceae குலத்தைச் சேர்ந்த, அழிந்து செல்கின்ற தாவரங்களின் சர்வதேச சிவப்பு தரவினை பகுப்பாய்விற்கேற்ப ஆய்வு செய்தல் பற்றிய தெளிவுபடுத்தும் 05 நாட்கள் செயலமர்வு ஒன்றை உயிர்ப் பல்வகைமை செயலாளர் அலுவலகம் மற்றும் IUCN நிறுவனத்துடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டது.சர்வதேச IUCN சங்கத்தின் சிவப்புத் தரவு பகுப்பாய்வுகள் பற்றிய விசேட நிபுணரான அமெரிக்காவின் மிசூரி தாவரவியல் பூங்காவின், திரு. ஜோர்ஜ் ஈ. ஸ்கெட்ஸ் (Mr. George E. Schatz) வளப் பங்களிப்பினை வழங்கினார்.இதற்காக இந்தியாவில் உள்ள 4 தாவரவியல் விஞ்ஞானிகள்உள்ளடங்கலாக இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களில் உள்ள அறிஞர்கள் மற்றும் தேசிய தாவரக்கயத்தின் அலுவலர்களும் சேர்ந்து 25 பேர் சமூகமளித்தனர்.

- தாவரக்கயத்தில் உள்ள சர்வதேச மட்டத்திலான தரவுகளை நடாத்துவதற்குத் தேவையான பார்கோட் இலச்சினையினைக் கொள்வனவு செய்து, உரிய மாதிரிகளின் அடிப்படையில் பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டது. இச் செயற்பாட்டினை தொடர்ச்சியாக மேற்கொள்ளல், தேசிய தாவரக்கயம் மற்றும் அதன் மாதிரிகளின் சர்வதேசஏற்புடைமைக்கு முக்கியமானதாக இருக்கும்.

- இலங்கையில் காணப்படுகின்ற 100 பூக்கும் தாவரங்களது புகைப் படங்கள் மற்றும் அதன் தகவல்கள் அடங்கிய**“Common Way Side Trees of Sri Lanka”(இலங்கையின் பொதுவான வீதியோரத் தாவரங்கள்)** என்ற புத்தகம் தொகுக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது.




**அச்சிடப்பட்ட “Common Way Side Trees of Sri Lanka” (இலங்கையின் பொதுவான வீதியோரத் தாவரங்கள்)புத்தகம்**

- மத்திய மாகாணத்தினுள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் காணப்படும் பாசித் தாவரங்களது பல்வகைமையைக் காட்டும் விஞ்ஞான சுவரொட்டி ஒன்று தயாரிக்கப்பட்டு சர்வதேச கருத்தரங்கு ஒன்றில் (27 ஆவது ஆசிய பசுபிக் வன விஞ்ஞான ஆணைக் குழு) காண்பிக்கப்பட்டது.

## நிதியத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட விசேட அபிவிருத்தி நடவடிக்கை பற்றிய சுருக்கம்

| | விடயம் | மதப்பீடு (ரூபா) | 2017.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான மொத்தச் செலவு (ரூபா) | மீதி (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | நிதியத்தின் நிருவாக நடவடிக்கைகளுக்கான செலவு | 1,015,300.00 | 1,011,104.28 | **3,895.72** |
| 2 | தாவரவியல் பூங்காக்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கான செலவு | 32,675,000.00 | 32,659,883.26 | **15,116.74** |
| 3 | பேராதெனிய அரச தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திக்கான செலவு | 28,310,000.00 | 28,195,361.14 | **114,638.86** |
| 4 | ஹக்கல தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திக்கான செலவு | 35,9111,000.00 | 35,889,703.69 | **21,296.31** |
| 5 | கம்பஹா தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திக்கான செலவு | 17,250,000.00 | 17,231,548.38 | **18,451.62** |
| 6 | கணேவத்த மூலிகைப் பூங்காவின் அபிவிருத்திக்கான செலவு | 710,000.00 | 706,966.44 | **3,033.56** |
| 7 | தேசிய தாவரக்கய அபிவிருத்திக்கான செலவு | 4,8550,000.00 | 4,841,184.98 | **8,815.02** |
| 8 | ஆய்வு மற்றும் பயிற்சி நிலையங்கள் அபிவிருத்திக்கான செலவு | 2,250,000.00 | 2,246,867.02 | **3,132,98** |
| 9 | பூப் பயிர்ச் செய்கைப் பயிற்சிப் பிரிவு அபிவிருத்திக்கான செலவுகள் | 24,626,000.00 | 24,612,131.04 | **13,868.96** |
| 10 | அவிசாவளை ஈர வலய தாவரவியல் பூங்காவின் அபிவிருத்திக்கான செலவு | 2,403,000.00 | 2,402,815.87 | **184.13** |
| | **மொத்தம்** | **15,000,000.00** | **149,797,566.10** | **202,433.90** |

**எஸ்.ஹெட்டியாராச்சி**
தலைவர்,தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் மற்றும்
செயலாளர்,
சுற்றுலா அபிவிருத்தி, வனசீவாரசிகள் மற்றும் கிறிஸ்தவசமய அலுவல்கள்அமைச்சு

**கலாநிதி எஸ். ஏ. கிருஷ்ணராஜா**
செயலாளர்,
தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் மற்றும் பணிப்பாளர் நாயகம்,
தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்